சுற்றுச்சூழல், காலநிலை
மாற்றம் மற்றும் வனத்துறை

# தமிழ்நாட்டில் வனப் பாதுகாப்புக்கான ஒரு புதிய சகாப்தம்

## 100 புதிய காப்புக் காடுகள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன



தமிழ்நாடு அரசு
தமிழ்நாடு வனத்துறை





**THIRU. M.K. STALIN**
HON’BLE CHIEF MINISTER

*அடுத்த 10 ஆண்டுகளில் தமிழக அரசு, மாநிலத்தின் பசுமைப் பரப்பை 23.7% இலிருந்து 33% ஆக உயர்த்தும். நடப்படும் ஒவ்வொரு மரக்கன்றும் சுற்றுச்சூழல் நீதியை நோக்கிய ஒரு படியாகும்.*



**THIRU R.S.RAJAKANNAPPAN**
HONOURABLE MINISTER FOR FORESTS AND KHADI

*“இந்த 100 புதிய காப்புவனங்கள், வரைபடத்தில் சேர்க்கப்பட்டவை மட்டுமல்ல, அவை வலுப்படுத்தப்பட்ட சூழலியல் அமைப்புகளையும், பாதுகாக்கப்பட்ட நீர்வரத்துப் பகுதிகளையும், செழிப்பான பல்லுயிர்ப் பெருக்கத்தையும், கோடிக்கணக்கான மக்கள் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான தகவமைப்புத் திறனையும் வெளிப்படுத்துகின்றன. மனிதனால் ஈடுசெய்ய இயலாத இயற்கைச் சூழலை பாதுகாப்பதன் வாயிலாக, இயற்கைவளப் பாதுகாப்பில் தமிழ்நாடு தொடர்ந்து நாட்டிற்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது. இப்போது நம் கடமை, இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையில், ஈடுபாட்டுடனான மேலாண்மை, சமூகப் பங்களிப்பு மற்றும் அறிவியல் அடிப்படையிலான நிருவாகத்தையும் பின்பற்றுவதேயாகும். இத்தகைய நிலப்பரப்புகள் எதிர்வரும் பல தசாப்தங்களிலும் மாநிலத்திற்குத் தொடர்ந்து உயிராற்றலை வழங்கும்.“*



**TMT. SUPRIYA SAHU, IAS**
ADDITIONAL CHIEF SECRETARY
ENVIRONMENT, CLIMATE CHANGE & FORESTS

*"100 புதிய காப்பு வனங்களை அறிவிக்கையிடுவது, அறிவியல், சமத்துவம் மற்றும் சூழலியல் பொறுப்பு ஆகியவற்றில் தமிழ்நாட்டின் உறுதியான காலநிலை மாற்ற மேலாண்மை நடவடிக்கையை வெளிப்படுத்துகிறது. வனப் பாதுகாப்பு என்பது காலநிலை நடவடிக்கையின் முக்கிய அங்கமாகும், மேலும் அந்த நடவடிக்கை சமுதாயத்தை மையமாகக் கொண்டு அமைய வேண்டும். இந்த நடவடிக்கையின் வாயிலாக, இயற்கை அடிப்படையிலான தீர்வுகள், பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் வலுவான சுற்றுச்சூழல் நிருவாகம் ஆகியவை இணைந்து, சூழலியல் அமைப்புகளுக்கும் மக்களுக்குமான நிலைத்தன்மையை உறுதி செய்யும் வளமான தொலைநோக்குத் திட்டத்தை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்."*



**THIRU.SRINIVAS R. REDDY, IFS**
PRINCIPAL CHIEF CONSERVATOR OF FORESTS
& HEAD OF FOREST FORCE

*“இத் தருணமானது, பல ஆண்டுகளான களப் பணிகள், சூழலியல் ஆய்வுகள், சமூக கலந்துரையாடல்கள் மற்றும் தமிழ்நாடு வனத்துறையாலும் எங்கள் பொறுப்பாளர்களாலும் மேற்கொள்ளப்பட்ட அறிவியல் திட்டமிடலையும் பிரதிபலிக்கிறது. இந்த நிலப்பரப்புகளை பாதுகாப்பதில், கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள், தொழில்நுட்ப அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் முன்களப் பணியாளர்களின் இடையறாத அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் நாங்கள் தொடர்ந்து அர்ப்பணிப்புணர்வுடன் செயலாற்றி வருகிறோம்.”*



புதிய காப்பு வனங்கள் குறித்த அறிவிக்கையின் வாயிலாக, வனப் பாதுகாப்பை தமிழ்நாடு அரசு வலுப்படுத்துகிறது.

மாநிலத்தின் இயற்கை பாரம்பரியத்தின் நீண்டகால பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைக் காப்பு வனங்கள் பிரிவின் கீழ் கொண்டுவருவதில் தமிழ்நாடு அரசு முறையாகவும் உறுதியாகவும் செயல்பட்டு வருகிறது.

1882 – ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் 4 – ஆம் பிரிவின் கீழ், அறிவிக்கையிடுவதன் வாயிலாக ஒரு பகுதியை காப்பு வனமாக அறிவிக்கும் பணி தொடங்குகிறது. இதைத் தொடந்து வன நிர்ணய அலுவலரால் விரிவான தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இச்சட்டப்பூர்வ நடைமுறை நிறைவுற்றவுடன் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 16 - ன் கீழ் இறுதி அறிவிக்கை வெளியிடப்படுகிறது. இதன் பிறகு அறிவிக்கப்பட்ட பகுதியானது அனைத்து வகையிலும் காப்பு வனமாக மாற்றம் பெற்று வனம் சாராத எந்தவொரு நடவடிக்கையும் அவ்விடத்தில் தடைசெய்யப்படும்.

இத்தகைய அறிவிக்கைகள் வனங்களின் சூழலியல் தன்மையைப் பாதுகாக்க உதவுவதுடன், அந்த காடுகளுக்கான தனித்துவமான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைப் பாதுகாப்பதிலும் உதவுகிறது.

தமிழ்நாடு இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் முன்னோடியாக விளங்கி வருவதை எடுத்துரைக்கும் விதமாக 2021 - ஆம் ஆண்டு முதல் நவம்பர் 2025 - ஆம் ஆண்டு வரை திண்டுக்கல், தர்மபுரி, மதுரை, கள்ளக்குறிச்சி, தேனி, சிவகங்கை, நாமக்கல், நீலகிரி, சேலம் மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் 13494.95.16 எக்டேர் பரப்பு 1882 – ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் பிரிவு 16 - ன் கீழ் 100 புதிய காப்பு வனங்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

ஒரு பகுதி காப்பு வனமாக அறிவிக்கை செய்யப்பட்டவுடன், 1980 – ஆம் ஆண்டு வனச் (பாதுகாப்புச்) சட்டத்தின் விதித் துறைகள் அப்பகுதிக்கு பொருந்தும். இது அரசாங்கப் பதிவுகளில் வனங்களாகப் பதிவு செய்யப்பட்ட பகுதிகளுக்கு மிக உயர்ந்த அளவிலான சட்டபூர்வ பாதுகாப்பினை வழங்குகிறது.

தமிழ்நாடு அரசு இத்தகைய நீடித்த மற்றும் நிலையான முயற்சிகள் மூலம், வனங்களைப் பாதுகாத்தல், பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாத்தல் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு சூழலியல் நிலைத்தன்மையைப் பாதுகாப்பதற்கான அதன் கடப்பாட்டிற்குத் தொடர்ந்து வலுச்சேர்த்து வருகிறது.



# திண்டுக்கல் மாவட்டம்



திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாட்டின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ளது. ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை கவரும் வரலாற்றுப் புகழ்மிக்க திண்டுக்கல் கோட்டை (திண்டுக்கல் மலைக்கோட்டை) இந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது. இம்மாவட்டம், உயர்தர உற்பத்திப் பொருட்களைத் தயாரிக்கும் பூட்டு மற்றும் தோல் தொழிற்சாலைகளுக்கும் வளமான கைத்தறித் தொழிற்சாலைக்கும் பெயர் பெற்றது. மேலும், புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான கொடைக்கானலும் இம்மாவட்டத்திலேயே அமைந்துள்ளது.



## வில்பட்டி வன வட்டாரம்

திண்டுக்கல் மாவட்டம் | வில்பட்டி கிராமம்

40.66.00 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 05/06/2024


சித்துவார்பட்டி வன வட்டாரம் - I
திண்டுக்கல் மாவட்டம் | சித்துவார்பட்டி கிராமம்
93.97.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 05/03/2025



**ஆண்டிப்பட்டி வன வட்டாரம் - IV**

திண்டுக்கல் மாவட்டம் | ஆண்டிப்பட்டி கிராமம்

19.33.5 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 26/03/2025



**ஆண்டிப்பட்டி வன வட்டாரம் - I**

திண்டுக்கல் மாவட்டம் | ஆண்டிப்பட்டி கிராமம்

107.77.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 06.08.2025



**ஆண்டிப்பட்டி வன வட்டாரம் -V**

திண்டுக்கல் மாவட்டம் | ஆண்டிப்பட்டி கிராமம்

277.46.50 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 05/03/2025



**ஆண்டிப்பட்டி வன வட்டாரம் - VI**

திண்டுக்கல் மாவட்டம் | ஆண்டிப்பட்டி கிராமம்

4.60.50 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள் 30.07.2025



## ஆண்டிப்பட்டி வன வட்டாரம் - III

திண்டுக்கல் மாவட்டம் | ஆண்டிப்பட்டி கிராமம்

47.46.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 03.09.2025



**கூக்கால் வன வட்டாரம் - IV**

திண்டுக்கல் மாவட்டம் | கூக்கால் கிராமம்

1.86.00 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 12/03/2025



**பூலத்தூர் வன வட்டாரம்**

திண்டுக்கல் மாவட்டம் | பூலத்தூர் கிராமம்

0.53.00 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 05/03/2025



### கோட்டூர் வன வட்டாரம்

திண்டுக்கல் மாவட்டம் | கோட்டூர் கிராமம்

31.74.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 10/07/2024



### நரியூத்து வன வட்டாரம்

திண்டுக்கல் மாவட்டம் | நரியூத்து கிராமம்

33.79.5 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 05/04/2023



பிள்ளையார்நத்தம் வனக்காலனி வன வட்டாரம்

திண்டுக்கல் மாவட்டம் | பிள்ளையார்நத்தம் கிராமம்

0.31.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 07.06.2023



சிறுமலை மேற்கு வன வட்டாரம் - I பிட் -IV

திண்டுக்கல் மாவட்டம் | சிறுமலை கிராமம்

599.53.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 25/05/2022



**சிறுமலை மேற்கு வன வட்டாரம் - I துண்டு - II**

திண்டுக்கல் மாவட்டம் | சிறுமலை கிராமம்

309.46.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 19/10/2022


சிரங்காட்டுப்பட்டி வன வட்டாரம் - III
திண்டுக்கல் மாவட்டம் | சிரங்காட்டுப்பட்டி கிராமம்
50.94.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.09.2025


சிரங்காட்டுப்பட்டி வன வட்டாரம் - IV
திண்டுக்கல் மாவட்டம் | சிரங்காட்டுப்பட்டி கிராமம்
53.66.00 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 05.03.2025



ஜம்புதுரைக்கோட்டை வன வட்டாரம் - II

திண்டுக்கல் மாவட்டம் | ஜம்புதுரைக்கோட்டை கிராமம்

25.36.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 05/06/2024


கொல்லப்பட்டி வன வட்டாரம்
திண்டுக்கல் மாவட்டம் | கொல்லப்பட்டி கிராமம்
39.07.00 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.07.2024


ஆ.கோம்பை வன வட்டாரம் - I
திண்டுக்கல் மாவட்டம் | அ.கோம்பை கிராமம்
40.54.50 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 05.03.2025


மூங்கில்பட்டி வன வட்டாரம் - I
திண்டுக்கல் மாவட்டம் | செல்லப்பநாயக்கன்பட்டி கிராமம்
135.88 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 07.12.2022



## அ.கோம்பை வன வட்டாரம் - II

திண்டுக்கல் மாவட்டம் | அ.கோம்பை கிராமம்

37.12.00 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 12.03.2025



## வேலாயுதம்பாளையம் வன வட்டாரம் - I

திண்டுக்கல் மாவட்டம் | வேலாயுதம்பாளையம் கிராமம்

110.02.00 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.09.2025



அய்யலூர் பிளாக்-1 வன வட்டாரம்
திண்டுக்கல் மாவட்டம் | அய்யலூர் கிராமம்
48.93.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 04/01/2023


குட்டம் வன வட்டாரம்
திண்டுக்கல் மாவட்டம் | குட்டம் கிராமம்
3.90.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 12.04.2023


வெரியப்பூர் வன வட்டாரம்
திண்டுக்கல் மாவட்டம் | வெரியப்பூர் கிராமம்
97.21.50 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 06.08.2025



கேதையுறம்பு வன வட்டாரம்
திண்டுக்கல் மாவட்டம் | கேதையுறம்பு கிராமம்
41.15.50 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.09.2025


வேலாயுதம்பாளையம் வன வட்டாரம் -IV
திண்டுக்கல் மாவட்டம் | வேலாயுதம்பாளையம் கிராமம்
13.42.00 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.09.2025


முசுவனூத்து வன வட்டாரம்
திண்டுக்கல் மாவட்டம் | முசுவனூத்து கிராமம்
105.93.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 09.11.2022



### விருப்பாச்சி வன வட்டாரம்

திண்டுக்கல் மாவட்டம் | விருப்பாச்சி கிராமம்

73.39.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.09.2025



கொம்பேரிபட்டி வன வட்டாரம் - I
திண்டுக்கல் மாவட்டம் | கொம்பேரிபட்டி கிராமம்
38.11.00 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.09.2025



சித்தர்கள்நத்தம் வன வட்டாரம்
திண்டுக்கல் மாவட்டம் | சித்தர்கள்நத்தம் கிராமம்
61.20.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 07/12/2022




எத்திலோடு வன வட்டாரம் - II (பாகம் I மற்றும் II)
திண்டுக்கல் மாவட்டம் | எத்திலோடு கிராமம்
26.90.78 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 05/03/2025


கூவனூத்து வன வட்டாரம்
திண்டுக்கல் மாவட்டம் | கூவனூத்து கிராமம்
75.20.50 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 05/04/2023


சிறுமலை மேற்கு வன வட்டாரம் - I
பிட் -V (பகுதி I முதல் IV வரை)
திண்டுக்கல் மாவட்டம் | சிறுமலை கிராமம்
588.77.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 15.10.2025


விருப்பாச்சி வன வட்டாரம் - II
திண்டுக்கல் மாவட்டம் | விருப்பாச்சி கிராமம்
31.02.38 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025


முளையூர் வன வட்டாரம் - I
திண்டுக்கல் மாவட்டம் | முளையூர் கிராமம்
6.25.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 25.06.2025


சாமிகானல் கூடுதல் வன வட்டாரம் - II
திண்டுக்கல் மாவட்டம் | கூக்கால் கிராமம்
1.19.50 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.09.2025





# நீலகிரி மாவட்டம்

மெய்சிலிர்க்க வைக்கும் இயற்கைக் காட்சிகள், இதமான காலநிலை மற்றும் அழகிய சூழலுக்காகப் புகழ்பெற்றது நீலகிரி மாவட்டம். உதகை (உதகமண்டலம்), குன்னூர், கூடலூர் உள்ளிட்ட முக்கிய நகரங்கள், முக்கிய சுற்றுலாத் தலங்களாக விளங்குகின்றன. தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களின் மலைத்தொடர்கள் சந்திக்கும் பகுதி இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது. தேயிலைத் தோட்டங்கள், காபித் தோட்டங்கள் மற்றும் காரட், உருளைக்கிழங்கு போன்ற காய்கறிகளின் விளைச்சலுக்கு இந்த மாவட்டம் சிறந்து விளங்குகிறது.


லாங்வுட் சோலா அடிசன் - III வன வட்டாரம்
நீலகிரி மாவட்டம் | கோத்தகிரி கிராமம்
2.02.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள் : 08.02.2023


கெத்தை கூடுதல் வன வட்டாரம்
நீலகிரி மாவட்டம் | கீழ்குந்தா கிராமம்
22.21 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள் : 29.05.2024



**சேரங்கோடு கூடுதல் 25 வன வட்டாரம்**

நீலகிரி மாவட்டம் | சேரங்கோடு கிராமம்

0.21.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025



**செறுமுள்ளி வன வட்டாரம் - 1**

நீலகிரி மாவட்டம் | செறுமுள்ளி கிராமம்

334.80.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள் : 03.03.2022



## செறுமுள்ளி வன வட்டாரம் - 2

நீலகிரி மாவட்டம் | செறுமுள்ளி கிராமம்

15.31.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள் : 23/02/2022


கேத்தலங்காடு வன வட்டாரம் - 3
நீலகிரி மாவட்டம் | ஓவேலி கிராமம்
14.00.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள் : 06/04/2022


கேத்தலங்காடு வன வட்டாரம் - 4
நீலகிரி மாவட்டம் | ஓவேலி கிராமம்
25.50.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள் : 29/05/2024



## கேத்தலங்காடு வன வட்டாரம் - 5

நீலகிரி மாவட்டம் | ஓவேலி கிராமம்

12.80.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள் : 06/04/2022


பசர்மலை வன வட்டாரம் - 3
நீலகிரி மாவட்டம் | ஓவேலி கிராமம்
0.47.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள் : 29/05/2024


பசர்மலை வன வட்டாரம் - 4
நீலகிரி மாவட்டம் | ஓவேலி கிராமம்
1.97.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள் : 29/05/2024



பசர்மலை வன வட்டாரம் - 6

நீலகிரி மாவட்டம் | ஓவேலி கிராமம்

1.94.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள் : 29.05.2024



பசர்மலை வன வட்டாரம் - 7

நீலகிரி மாவட்டம் | ஓவேலி கிராமம்

0.90.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள் : 29.05.2024



### பசர்மலை வன வட்டாரம் - 8

நீலகிரி மாவட்டம் | ஓவேலி கிராமம்

26.75.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள் : 29/05/2024



### எல்லமலை வன வட்டாரம் - 2

நீலகிரி மாவட்டம் | ஓவேலி கிராமம்

136.66.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள் : 29/05/2024



**பீச்சனகொல்லி கூடுதல் வன வட்டாரம்**

நீலகிரி மாவட்டம் | செறுமுள்ளி கிராமம்

29.74.5 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள் : 29/05/2024


குறுமர் மலை வன வட்டாரம் - I
நீலகிரி மாவட்டம் | ஓவேலி கிராமம்
35.15.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள் : 29/05/2024


குறுமர் மலை வன வட்டாரம் - 2
நீலகிரி மாவட்டம் | ஓவேலி கிராமம்
12.18.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள் : 29/05/2024


கோழிமலை வன வட்டாரம் பகுதி I மற்றும் II
நீலகிரி மாவட்டம் | முதுமலை கிராமம்
0.13.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள் : 30/07/2025



### தேவகிரி வன வட்டாரம்

நீலகிரி மாவட்டம் | தேவாலா கிராமம்

8.52.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள் : 03.06.2022



### நாடுகாணிகுன்னு கூடுதல் வன வட்டாரம்

நீலகிரி மாவட்டம் | தேவாலா கிராமம்

20.20.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள் : 01.03.2022





# தென்காசி மாவட்டம்

2019ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றான தென்காசி மாவட்டம், இதமான காலநிலையையும் இயற்கை அழகையும் கொண்டுள்ள மாவட்டமாகும். இப்பகுதியில் வேளாண்மை வளம் பெற முக்கிய பங்காற்றுகின்ற சிற்றாறும் ஹனுமன்நதியும் இம்மாவட்டத்தில் பாய்கின்றன. இம்மாவட்டத்தில் பெரும்பாலான மக்கள் வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். வரலாற்றுச் சிறப்புமிக்க சித்தறல் ஜைன் நினைவுச் சின்னங்கள் இம்மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாத்தலமாகும் சிற்றாற்றில் அமைந்துள்ள குற்றால அருவி இப்பகுதியின் மற்றொரு முக்கியமான சுற்றுலாத்தலமாகும்.


வீராணம் வன வட்டாரம்
தென்காசி மாவட்டம் | வீராணம் கிராமம்
9.79.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.09.2025





# தருமபுரி மாவட்டம்

தமிழ்நாட்டின் வடமேற்கு எல்லைப் பகுதியில் அமைந்துள்ள தருமபுரி மாவட்டம் மதம் சார்ந்த, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எண்ணற்ற தலங்களையும், அழகிய இயற்கைச் சூழலையும் தன்னகத்தே கொண்டுள்ளது. காவிரி நதியை எல்லையாகக் கொண்டுள்ள இம்மாவட்டத்தில் சுமார் 30 விழுக்காடு வனப்பகுதியின் கீழ் உள்ளன..மேலும், இந்த பகுதி யானைகள் வழிதடத்திற்குள் அமைந்துள்ளது. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி, அதியமான் கோட்டம், பாப்பாரப்பட்டியில் உள்ள சுப்பிரமணிய சிவா நினைவகம், தொரப்பள்ளியில் உள்ள ராஜாஜி நினைவகம், கிருஷ்ணகிரி அணை ஆகியவை இம்மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்கள் ஆகும். இம்மாவட்டத்தின் பொருளாதாரம் பெரும்பாலும் பருவமழையையும் பாசனத் திட்டங்களையும் சார்ந்துள்ள வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது;



**நாகர்கூடல் வன வட்டாரம் - II**

தர்மபுரி மாவட்டம் | நாகர்கூடல் கிராமம்

66.08.5 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 18.04.2022



**நாகர்கூடல் வன வட்டாரம் - IV**

தர்மபுரி மாவட்டம் | நாகர்கூடல் கிராமம்

39.92.5 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 25/05/2022


வெளாம்பட்டி வன வட்டாரம்
தர்மபுரி மாவட்டம் | A.வெளாம்பட்டி கிராமம்
2.43.00 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025


அக்கமன அள்ளி வன வட்டாரம்
தர்மபுரி மாவட்டம் | அக்கமன அள்ளி கிராமம்
6.71.50 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025


எர்ரன அள்ளி கூடுதல் வன வட்டாரம்
தர்மபுரி மாவட்டம் | எர்ரன அள்ளி கிராமம்
20.27.00 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025


தொப்பூர் வடக்கு வன விரிவாக்க வன வட்டாரம்
தர்மபுரி மாவட்டம் | பூதனஅள்ளி கிராமம்
34.31.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025


நத்ததஹள்ளி வன வட்டாரம் - III
தர்மபுரி மாவட்டம் | நத்ததஹள்ளி கிராமம்
32.37.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025


மெனசி கூடுதல் வன வட்டாரம்
தர்மபுரி மாவட்டம் | மெனசி கிராமம்
21.95.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025





# சிவகங்கை மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு,, 1985 ஆம் ஆண்டு முதல் தனி மாவட்டமாக சிவகங்கை மாவட்டம் செயல்படத் தொடங்கியது. இது ஒரு முக்கியமான புனித யாத்திரைத் தலமாகும். அற்புதமான திராவிடக் கட்டடக்கலையை அடிப்படையாகக் கொண்ட பல கோயில்களை இம்மாவட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது. செட்டிநாடு கட்டடக்கலை, அறுசுவை உணவு வகைகள் மற்றும் தொண்மையான வெண்கல வார்ப்பு தொழிற்சாலைகளுக்கு பெயர் பெற்ற காரைக்குடி நகரம், இம்மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.



**களத்தூர் வன வட்டாரம்**
**பிட்-I மற்றும் பிட்-II**

சிவகங்கை மாவட்டம் | களத்தூர் கிராமம்

143.90.00 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 29/05/2024



**மேலப்பிடாவூர் வன வட்டாரம்**

சிவகங்கை மாவட்டம் | மேலப்பிடாவூர் கிராமம்

78.30.5 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 19/04/2023



## அமராவதி வன வட்டாரம்

சிவகங்கை மாவட்டம் | அமராவதி, சேதுரகுநாதப்பட்டினம் கிராமம்

597.45.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 08/11/2023


கப்பலூர் துண்டு - I, துண்டு - II,
துண்டு -III வன வட்டாரம்
சிவகங்கை மாவட்டம் | கப்பலூர் கிராமம்
88.31.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 05/04/2023


பூசலாகுடி வன வட்டாரம்
சிவகங்கை மாவட்டம் | பூசலாகுடி கிராமம்
50.79.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 15/11/2023





# தேனி மாவட்டம்

தேனி மாவட்டம் கேரள எல்லையை ஒட்டி மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இது மதுரை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. பெரியகுளம் வட்டத்தில் அமைந்துள்ள வைகை அணையும் கும்பக்கரை அருவியும், உத்தமபாளையம் வட்டத்தில் அமைந்துள்ள சுருளி அருவியும் இம்மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா தலங்களாகும். மேலும், வைகை மேகமலையில் உற்பத்தியாகிறது.



## ஹைவேவிஸ் வன வட்டாரம்

தேனி மாவட்டம் | நாராயணத்தேவன்பட்டி மலை கிராமம் | மற்றும் மேகமலை கிராமம்

2,836.33.00 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 12.09.2025


மேகமலை விஸ்தரிப்பு வன வட்டாரம்
தேனி மாவட்டம் | கடமலைக்குண்டு கிராமம்
5.95.50 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 02/08/2023


பொந்துக்குண்டு கரடு வன வட்டாரம்
தேனி மாவட்டம் | தேவாரம் கிராமம்
27.22.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 08.02.2023


கண்டமனூர் கிழக்கு காப்பு வன
விரிவாக்கம் வன வட்டாரம்
தேனி மாவட்டம் | கடமலைக்குண்டு கிராமம்
8.53 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 05.04.2023


அழகாபுரி வன வட்டாரம்
தேனி மாவட்டம் | அழகாபுரி கிராமம்
5.50 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 30.08.2023


வெள்ளக்கரடு வன வட்டாரம்
தேனி மாவட்டம் | தாமரைக்குளம் கிராமம்
119.09.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 09.08.2023


சுரங்கனார் விரிவாக்கப்பகுதி வன வட்டாரம்
தேனி மாவட்டம் | மேலக்கூடலூர் கிராமம்
0.20.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 05/04/2023


பெருமாள் கோயில் கரடு ஒதுக்குக்காடு விஸ்தரிப்பு வன வட்டாரம்
தேனி மாவட்டம் | வீரபாண்டி கிராமம்
8.59 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 20.08.2025





# மதுரை மாவட்டம்

மதுரை, தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வரும் மிகப் பழமையான நகரங்களில் ஒன்றாகவும், முக்கிய கலாச்சார மையமாகவும் திகழ்கிறது. திராவிடக் கட்டடக்கலையின் அற்புதமான படைப்பாக விளங்கும் மீனாட்சி அம்மன் கோவில் இங்கு அமைந்துள்ளதால் இந்நகரம் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான பக்தர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் கவருகிறது. தமிழ்நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ள இம்மாவட்டம், வணிகம், கல்வி மற்றும் சுகாதார சேவைகளின் முக்கிய மையமாக திகழ்கிறது. பெரும்பாலும் நகரமயமடைந்திருந்தாலும், இந்த மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க காப்புவனப் பகுதிகளும் அமைந்துள்ளன.


கல்லூத்து வன வட்டாரம்
மதுரை மாவட்டம் | கல்லூத்து கிராமம்
20.23.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 07.12.2022


தலக்காகுட்டு வன வட்டாரம்
மதுரை மாவட்டம் | பள்ளப்பட்டி கிராமம்
28.04.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 08.02.2023

### மாமலை விரிவாக்கம் வன வட்டாரம்

மதுரை மாவட்டம் | சிலம்பக்கோன்பட்டி கிராமம்

140.50.5 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 05.07.2023



### கள்ளிக்குட்டுக்கரடு வன வட்டாரம்

மதுரை மாவட்டம் | பள்ளப்பட்டி கிராமம்

9.84.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 12.04.2023




உத்தப்பநாயக்கனூர் கூடுதல் வன வட்டாரம் - III
மதுரை மாவட்டம் | உத்தப்பநாயக்கனூர் கிராமம்
7.56.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள் : 08/11/2023





# கள்ளக்குறிச்சி மாவட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்டம், 2019 ஆம் ஆண்டு விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரித்து உருவாக்கப்பட்ட புதிய மாவட்டமாகும். இம்மாவட்டம், மலைப்பாங்கான நிலப்பரப்புகள், சமவெளி நிலப்பரப்புகள் என இரு நிலவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சியில் நெல் பதப்படுத்தும் தொழிற்கூடங்கள் அதிகம் காணப்படுவதால், இது "விவசாயத்தின் தாயகம்" என்றும் குறிப்பிடப்படுகிறது. கோமுகி, மணிமுத்தாறு, கெடிலம் மற்றும் தென்பெண்ணையாறு ஆகியவை இந்த மாவட்டத்தில் பாயும் முக்கியமான நதிகளாகும்.



## சின்ன திருப்பதி வன வட்டாரம்

கள்ளக்குறிச்சி மாவட்டம் | பொட்டியம், நாரணம்பட்டி கிராமம்

1138.95 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 19.10.2022



## பெரும்பூர் வன வட்டாரம்

கள்ளக்குறிச்சி மாவட்டம் | சிறுக்களூர், பெரும்பூர், புதுப்பாலப்பட்டு, பாச்சேரி

1910.47.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 05.06.2024


இன்னாடு வன வட்டாரம்
கள்ளக்குறிச்சி மாவட்டம் | இன்னாடு கிராமம்
638.50 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 23/07/2025


சேராப்பட்டு வன வட்டாரம்
கள்ளக்குறிச்சி மாவட்டம் | சேராப்பட்டு கிராமம் மற்றும் ஆலனூர் கிராமம்
429.94.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025



# சேலம் மாவட்டம்



சேலம் மாவட்டத்தில் பெரிய அளவிலான எஃகு உற்பத்தி மற்றும் மக்னசைட் சுரங்கத் தொழில்கள் இருப்பதால் தமிழகத்தின் “இரும்பு நகரம்” எனப் பெரிதும் அழைக்கப்படுகிறது. இந்தப்பகுதி மாம்பழச் சாகுபடி மற்றும் பட்டு உற்பத்தியின் முக்கிய மையமாகவும் விளங்குகிறது. மேலும், இந்தநகரம் பிரபலமான சுற்றுலா தலமான ஏற்காடு உள்ளிட்ட மலைகளால் சூழப்பட்டுள்ளது.



## பைத்தூர் வடக்கு கல்லுக்கட்டு வன வட்டாரம்

சேலம் மாவட்டம் | பைத்தூர் வடக்கு கல்லுக்கட்டு கிராமம்

1.56.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.09.2025


சின்னகல்ராயன் தெற்கு
நாடு வன வட்டாரம் - II
சேலம் மாவட்டம் | சின்னகல்ராயன் தெற்கு நாடு கிராமம்
3.54.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 03.09.2025


ஆலமரத்துப்பட்டி வன வட்டாரம் - II
சேலம் மாவட்டம் | ஆலமரத்துப்பட்டி கிராமம்
15.23.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.09.2025



**சாம்பள்ளி வன வட்டாரம்**

சேலம் மாவட்டம் | சாம்பள்ளி கிராமம்

4.04.5 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 10.09.2025



**சின்னக்கல்ராயன் தெற்கு நாடு வன வட்டாரம்**

சேலம் மாவட்டம் | சின்னகல்ராயன் தெற்குநாடு கிராமம்

2.20.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 20.08.2025


பாலமலை வன வட்டாரம்
சேலம் மாவட்டம் | மஞ்சினி கிராமம்
180.69.50 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24/09/2025


ஆலமரத்துப்பட்டி வன வட்டாரம் - I
சேலம் மாவட்டம் | ஆலமரத்துப்பட்டி கிராமம்
14.99.5 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025


பைத்தூர் வடக்கு வன வட்டாரம்
சேலம் மாவட்டம் | பைத்தூர் வடக்கு கிராமம்
8.28.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025


குறிச்சி "A" வன வட்டாரம்
சேலம் மாவட்டம் | குறிச்சி கிராமம்
38.24.0 எக்டர்
அரசிதழ் அறிவிக்கை நாள்: 24.09.2025





# நாமக்கல் மாவட்டம்

நாமக்கல் மாவட்டம் 1997 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதிய மாவட்டமாக உருவாக்கப்பட்டது. இது ஆசியாவிலேயே அதிகளவில் முட்டை உற்பத்தி செய்யும் முக்கிய நகரங்களில் ஒன்றாகும். நாமக்கல் என்ற பெயர், நகரின் மையத்தில் அமைந்துள்ள ஒரேயொரு பெரிய பாறை அமைப்பான நாமகிரியிலிருந்து உருவானது. நாமக்கல் மலைக்கோட்டை, சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளதால், இந்த மாவட்டத்தின் முக்கியமான சுற்றுலா தலங்களில் இதுவும் ஒன்றாகும். மாவட்டத்தின் வடபகுதி மலைப்பகுதிகளாகவும், தென்பகுதி சமவெளிப் பகுதிகளாகவும் காணப்படுகின்றன. இந்த மாவட்டம் நாட்டின் மிகப்பெரிய முட்டை உற்பத்தி மையங்களில் ஒன்றாக இருப்பதாலும், ஏராளமான கோழிப்பண்ணைகள் உள்ளதாலும் "கோழிப்பண்ணை நகரம்" என்றும் அழைக்கப்படுகிறது.



நைனாமலை கரடு வன வட்டாரம்

நாமக்கல் மாவட்டம் | மின்னாம்பள்ளி கிராமம்

703.36.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 08.03.2023



புதூர் பாலப்பட்டி வன வட்டாரம்

நாமக்கல் மாவட்டம் | புதூர் பாலப்பட்டி கிராமம்

8.74.5 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 11.06.2025



## மூலக்குறிச்சி வன வட்டாரம்

நாமக்கல் மாவட்டம் | மூலக்குறிச்சி கிராமம்

10.80.0 எக்டர்

அரசிதழ் அறிவிக்கை நாள்: 11.06.2025



*Deep gratitude and appreciation to all those who have extended their support and assistance at various stages of this work.*

*Sincere thanks are due to the officers and staff for their support from, Forest, Revenue ,Law And Tamil Development Department*

---

PHOTOGRAPHY DESIGN : PRAVEEN MURALEEDHARAN

CONTENT DEVELOPMENT : MEENAKSHI JAYARAM

AERIAL DESIGN : NITHIN ANTHIKKADAN

DESIGN : NOEL XAVIER